உ

சிவமயம்.

ஸ்ரீ சந்த்ரமௌலீசாய நம:

ஸ்ரீ சாரதாயை நம:

பகவதே ஜகத்குரவே ஸ்ரீ சந்த்ரசேகர

பாரதீயதீந்த்ராய நம:

ஸ்ரீ பாரதீயதீந்திரர்

தோத்திரப்பாமாலை.

(பன்னிருசெய்யுள்)

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

சிதம்பரம் ஸ்ரீ வேலன் (பவர்) பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

27—1—1954.

உ

சிவமயம்.

ஸ்ரீ சந்த்ரமௌலீசாய நம:

ஸ்ரீ சாரதாயை நம:

பகவதே ஜகத்குரவே ஸ்ரீ சந்த்ரசேகர

பாரதீயதீந்த்ராய நம:

ஸ்ரீ பாரதீயதீந்திரர்

தோத்திரப்பாமாலை.

(பன்னிருசெய்யுள்)

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

சிதம்பரம் ஸ்ரீ வேலன் (பவர்) பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது,

27—1—1954.

உ

சிவமயம்.

நூன்முகம்.

மலர்தலையுலகில், புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே ஜீவர்கள் தருமார்த்தகாமமோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை, பிரஹ்மான்ம ஐக்கிய ஞானத்தால் அடைதற்பொருட்டு, கைலையங்கிரிவாசராகிய ஸ்ரீ பரமேசுரர் சிருங்ககிரியில் துங்கபத்ரா நதிதீரத்தில் சத்திபீடபுரத்தில் மடத்தில் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ யதீந்திர சுவாமிகளாக மானுடத்திருமேனிதாங்கி யெழுந்தருளியிருந்து அனுக்கிரகஞ் செய்துகொண்டிருப்பது இவ்வுலகம் நன்கறிந்ததே: அத்தகைய சுவாமிகளுக்கு நாளிது விஜயவருஷம் சித்திரைமாதம் கிருஷ்ணபக்ஷத்தில் நடைபெற்ற சஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ கோகர்ண க்ஷேத்திரத்தில் கோரக்ஷா பிரஹ்மசர்ய ஆச்ரமத்திலிருக்கின்ற **ஸ்ரீ ஜகத்குரு சங்கரகிங்கரராகிய தெய்வராத வித்வத்சிரோமணியவர்கள்** சுபாஷிதரூப

KOVILOOR MADALAYAM மடாலயம்

சுகந்த புஷ்பங்களைக்கொண்டு துவாதசசுலோக வடிவ கவிமாலை தொடுத்துத் திருவடியில் சமர்ப்பணஞ் செய்தனர். அப்பெற்றித் தாய பன்னிரு சுலோகங்களையும் தமிழிலே செய்யுள் வடிவமாகச் செய்யவேண்டும் என்று கோவிலூர் மடாலயம் நமது **ஸ்ரீலஸ்ரீ மஹா சன்னிதானம் சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளவர்கள்** சொல்லியதற்கிணங்கி **ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகளவர்கள்** மொழிபெயர்த்துப் பன்னிருசெய்யுளாகச்செய்து **ஸ்ரீ பாரதீயதீந்திரர் தோத்திரப்பாமாலை** யென்னும் பெயருமிட்டுத்தந்தனர். இதனை யிவ்வுலகம் ஓதியுணர்ந்து நன்மையடைதற்பொருட்டு அச்சிற் பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றோம்.

சிதம்பரம்,
25—12—'53.

இங்ஙனம்,
சோம. இராமலிங்கம்.

முதற்குறிப்பு வெண்பா.

உலகெவ் வுலகுக்கு மன்னைமெய் யான
சுருதியந்த முண்மை விருப்ப முணவு
மறைபுகலும் வித்தையுண்மை யாதியா னெஞ்சே
பிறையணிவா ராசி பெறு.

(கு—ரை). பிறையணிவார் = ஸ்ரீ சந்திரசேகர பாரதியதீந்திரசுவாமிகள்

உ

சிவமயம்.

சகுண நிற்குண சொரூப வணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனாய்ப் பிறவி யாதிவிக் கிரியை
யிலாதவீ சானனா யுலகி
னாசிர யனுமாய்த் தானது பெறாத
வற்புத விக்கிர மனுமாய்
வேசறு பாதத் துவனுமாய்ப் பிரம
வித்தியா தேவதை யுமையா
ணேசனா மாய போதவா னந்த
நிறைகட லிடைநிதம் படிவாம்.

சிவமயம்.

ஸ்ரீ கணேசாய நம:

நூல்.

[ஸ்ரீ பகவற்பாதர் வசித்த சிருங்ககிரி சத்திபீடபுரம்
ஸ்ரீ சந்திரமௌலீசர் முதலாயினோர்க் கிடமாயிருத்தல்.]

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

(க) உலகரருச் சனைசெய்யும் பகவற் பாத
ருயர்குரவர் துறவரச ருறைந்த தூய
மலையிறைதஞ் சிருங்கைதனிற் சத்தி பீட
மன்னுபுர மதிலொளிர்சா ரதையாந் தேவி
நிலவணிசெஞ் சடைமுடியர் பகவற் பாதர்
நிமலசுரே சுரரொடுபா ரதிப்பேர் மேவி
யிலகுயதி சந்திரசே கரரா மீச
ரிணையில்சொரு பத்தென்று மிலங்கு கின்றார். (1)

[ஸ்ரீ சந்திரசேகரரவதரித்தல்.]

(உ) எவ்வுலகுக் குங்குருவாய் முதல்வ ரான
விறைவனூர் பிறை முடித்த பகவ னூர்தாஞ்
செவ்வியயோ கந்தவமே கல்வி மேன்மைச்
செல்வமுறீஇப் பிரஞான பானு வாகி
யெவ்வமில்கம் பீரசின்னஞ் சிரத்தை சாந்தி
யெனுமிந்து கலைதெளிவாம் பிரம நிட்டை
தவ்விலுயர் வித்தையொடிங் கவத ரித்தார்
சந்திரசே கரயதிப்பேர் சார்ந்து மன்னே. (2)

[மாதாவின் பிரபாவமும், இம்மூர்த்தியின் பிரபாவமும்.]

(ங) அன்னையெவ ணற்செல்வ யோகத் தோற்ற
வடைவினருந் தவத்தினெடும் வருத்தத் தாலே

தன்னொளியாற் றன்பதியின் னருளா லின்றுள்
சகற்குருவைப் பகவதியப் பெரிய நல்லா
ளுன்னனனி செயத்தக்கா ளென்னை மேன்மை
யுலகினிலே பெறச்செய்த குரவர் வேந்தர்
தந்நிகரில் சந்திரசே கரய தீசர்
சந்ததஞ்சேர் வுறத்தகுவர் சனவுள் ளத்தே. (3)

[ஸ்ரீ பகவற்பாதர்தாம் இம்மூர்த்தி யெனல்.]

(ச) 'மெய்யான பிரமவித்தை வலியாற் றெய்தம்
விலக்குவதிற் பிரமான்ம தத்து வத்தி
னையாத கருத்துடைய சித்தாந் தத்தை
நாட்டுதலின் முதல்வராம் பகவற் பாதர்
மெய்யாக விப்பொழுது மதனே டுற்ற
மெய்த்தவத்தாற் பிரமானு பவத்தின் மேன்மை

பொய்யாத சந்திரசே கரராய் நீத்துப்
புவிபோற்றத் திகழ்கின்றார் யோகத் தாலே.

[வேதாந்த விசார முதலியவற்றால் தத்துவஞானிகள்.]

(ரு) சுருதியந்த மாதிவிசா ரத்தான் மெய்யாய்த்
துலங்குபொருள் சமாகிதரா யறிந்தவ் வந்தங்
கருதான்ம பிரமமாம் வேத சாரங்
கண்டுளத்தா னன்குமுனி வரரா யுண்மை
சருவநரர்க் குமுணர்த்திப் பகவற் பாதர்
தந்திடுகொள் கையையீந்தே தமது வாக்கான்
மருவினிய சந்திரசே கரய தீசர்
மகிழ்சாந்தர் மனிதருள மன்னத் தக்கார். (5)

கோவிலூர் KOVILOOR MADALAYAM

[மகாதேவ ரூபம் வித்தை, மறை இம்மூர்த்தி மூகங்களால்
சருவாத்தும ரூபத்தால் விளங்குதல்.]

(சு) உண்மையறி வின்பமிர்த வபய சார
வுள்ளுயிராய்த் தொல்பிரம பரமாய் நிற்குந்
திண்மைபெறு மனந்தமத்து விதம னாதி
சிவமசல பூர்ணமகா தேவ ரூபம்
தண்மைதரு வித்தைமறை முகங்க ளாலே
சற்புருடர் பிரமானு பூதிக் காக
வண்மைசெறி சந்திரசே கரர்மு கத்தான்
மன்னிவிளங் குகவனைத்தாம் வடிவத் தாலே. (6)

[விடய வெற்றி முதலியவை.]

(எ) விருப்பமுத லியவிடய மனைத்தும் வென்று
விமலவவ தூதசித்த முனிவ ராயிங்

குருப்பலசே ருலகமுத லெல்லாந் தாண்டி
யுள்ளேதா மாகமகா ஞானி யாகி
யருப்பகவுன் மத்தரென வெளியி லேநின்
றந்தோசா மியத்திஇயி லபய ராகித்
தருப்பமிலாச் சந்திரசே கரய தீசர்
தமிலொடுங்கிச் சங்கரராய்க் காணப் பெற்ருர். (7)

[மெய்யுணர்வால் உணவாதிகளின்
நினைவின்மை முதலியவை.]

(அ) உணவுறக்கம் விளையாட்டு விடய மாதி
உணர்வாலெல் லாமறந்துள் வெளியி லென்றுந்
தணவுதலில் சாமியத்தி ஞேடு தம்மிற்
றங்குபிரி இயிற்பிரம பூர ணத்தே
யெணமிற்றிங் கேவிழித்துச் சத்து வத்தா

லெவ்வுயிரும் விழிப்பித்துண் மையிற்ச மாதி
யணவிநிறை சந்திரசே கரய தீச
ரகிலத்தே மூத்தான்மா வாகி நின்றார். (8)

[வைதிக தரும சம்ரக்ஷணத்தை மேலாகக்
கொண் டொழுகுதன் முதலியவை.]

(௯) மறைபுகலு மறங்காக்கு மனத்த ராயம்
மறையறங்கட் டளையிடுவோர் குரவ ராகி
நிறையுயிர்மேற் சமநோக்கா லருண்மேற் கொள்ளு
நினைவினராய் நிக்கிரக சமர்த்த ரேனும்
பொறைமேவிச் சித்தரா யாசை நீத்த
புவனமாண் டிப்புவனங் கடந்தே யெங்கு
முறையான்ம சுகக்கடலிற் படிந்து வெற்றி
யுறுகின்றார் சந்திரசே கரர்தம் மூள்ளே. (9)

[ஸ்வராஜ்ய யோக வுதயத்தினுல் ஸ்ரீ வித்யாபூஜித
சார்வபௌம யதிராஜத் தன்மை முதலியவை.]

(௧௦) வித்தையினுற் பூசிதநற் சார்வ பௌம
வேந்தர்துற வியராய்த்த மரசின் யோக
மெத்திவரு தலினுலகர் நலத்திற் கோங்கும்
விறலினராய்ச் சுதந்திரராய்ச் சுராட்டாய் முற்றுஞ்
சுத்தபரி பூரணராய்த் துலங்கு கின்ருர்
துன்றுமகத் திலக்கியத்தில் வெளிநோக் கஞ்சேர்
சத்தியமா சாம்பவிமுத் திரையாற் றம்முட்
சந்ததமுஞ் சந்திரசே கரய தீசர். (10)

[சத்திய இதவுபதேச வாயிலாகக் கவலை ரூப துன்ப
நீக்கம் செய்கின்றவரே என விளித்துத் தண்ணளி செய்து
காப்பாற்ற வேண்டுமெனல்.]

(௧௧) உண்மைநல வுபதேச முகத்தாற் றுன்ப
மொழிவிப்பீர் கடவுளே யிறைவ ரேநீர்
தண்மையிரக் கம்பிரிய மகிழ்ச்சி சார்ந்து

சந்ததநன் கருள்விழியா லிவனைப் பார்த்து
வண்மையுறு திருவடியே தஞ்ச மென்று
வந்தடைந்து நம்புதலே மனத்தோ டுற்ற
எண்மையனைத் தமதுதெய்வ ராதன் றன்னை
யென்றும்யதி சந்திரசே கரரே காக்க. (11)

[சிருங்ககிரியின் பரமபாவனத்தன்மையில் காரணமும் சிவஞான சுகசம்பத்துநிமித்தம் இம்மூர்த்தியுபாசனையும்.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(கஉ) ஆதிபக வற்பாதர் சுரேசுவர ரருச்சனைசெ
யம்மை வாணி
சோதிமதி சூடாரு ரிருத்தலிற்றாய் தாஞ்சிருங்கைத்
தொன்ம டத்தே
நாதரடி யவராகி யாதரவி லின்பசிவ
ஞான நண்ண
வோதியுள சிரத்தையாற் சந்திரசே கரயதியை
யுபாசிக் கின்றோம். (12)

குருவணக்கம்.

வெண்பா.

குருவே யயன்மால் குருவேமா தேவன்
குருவே தனைத்தருஞ்சூற் கொண்டல்—குருவேநல்
வைப்பா நவநிதியவ் வள்ளலை யன்பினுபா
சிப்பாந் தொழுதுதுதி செய்து.

ஸ்ரீ பாரதீயதீந்திரர் தோத்திரப்பாமாலை முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.

—※—

இ:.து, வல்லநாடு, க. மு. சங்கரசாஸ்திரிகள் இயற்றியது.

பத்தர்களி லிவனமக்குத் தமன்சகல நூலுணர்விற் பனன்மேலாம்வி
ரத்தனெழிற் சிவகுருவென் பவனென்னு மருத்தமதை நண்ணுநன்னு
மத்தனெனக் கடவதென்றோர்ந் தெவன்சுதனு யவதரித்தான் வளமார்சிங்கை
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

ஒத்தகுரு டனைச்சேர்மற் றோர்குருட னெனத்துர்மத ருபதேசத்தாற்
பித்தர்களாய்த் தன்மதம்விட் டயன்மதத்திற் புகுந்துலகம் பிரலாபிக்கச்

KOVILOOR
MADALAYAM
மடாலயம்

சித்தமுவந் தவதரித்திங் கெவனதனை யிரக்ஷித்தான் சிருங்கைவாழும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

வித்தகமெய்க் குருசரண மூலமலான் மனிதருக்கு வேறுதஞ்சம்
இத்தரையி லிலதெனலை யாவருக்கு முதாரணமா யியம்பல்போல
மெத்தமகிழ்ந் தப்பெயர்சேர் திவ்யதலயாத்திரையை விரும்பிச் செல்லும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

மத்தகநேர் தனவுமையோ டிருந்துபதே சஞ்செயின் மாந்தர்மாவ
னத்தமுமில் வீடுதவு ஞானமதை யோர்சிறிது நம்பாரென்றே
வித்தமுத லாமனைத்துந் துறந்தயதி வேந்தெனவந் துற்றன்சிங்கை
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

எத்தவருந் தொழுதிடவவ் வடிவமதா யடிக்கடியவ் விணையிலாத
சுத்தவுயர் தானமதி லுற்றுமறை நான்கினையுந் துலங்கச்செய்து
புத்தமுதை நேர்சுருதி முடியிலொளிர் பவனெவனற் சிருங்கைவாழும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.